DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
CALENDAR CASE No. 27/2014
Prosecution Witness PW 1
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பிரபாகரன். | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **-20.08.2024.**

எதிரிகள் ஆஜரில்லை.

முதல்விசாரணை-

நான் தற்போது மதுரை, செயற்பொறியாளர் அமலாக்கப்பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 2005 ஆம் ஆண்டில் நான் உதவி செயற்பொறியாளர், பசுமலையில் MRT பிரிவில் பணியாற்றி வந்தேன். கடந்த 25.09.2005 அன்று உதவி செயற்பொறியாளர் பகிர்மானம் கல்லுப்பட்டி அவர்கள் உயர்மின் அழுத்த மின் இணைப்பு எண்.116, M/s.Sri Manickya vinayagar spinning mills, T. Kunnathoor மின் இணைப்பில் மின் திருட்டு நடந்துள்ளதற்கான ஆதாரங்கள் உள்ளதென சந்தேகத்தின் பேரில் மீட்டர் மற்றும் மீட்டரிங் Arrangements ல் உள்ள பாதுகாப்பு முத்திரைகளை ஆய்வு செய்ய திரு. செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் அவர்கள் அளித்த வேண்டுகோளின்படி எங்கள் MRT பிரிவின் குழுவினருடன் மேற்படி மின் இணைப்பினை அன்றைய தினமே இரவு சுமார் 11.45 மணியளவில் உதவி செயற்பொறியாளர்

அமலாக்கப்பிரிவு திரு. இரவீந்திரன் அவர்களும், உதவி செயற்பொறியாளர் பகிர்மானம் திரு. செல்வராஜ் அவர்கள் முன்னிலையிலும் மேற்படி மின் இணைப்பில் உள்ள மீட்டரிங் Arrangements ல் உள்ள பாதுகாப்பு முத்திரையானது ஆய்வு செய்யப்பட்டது. அந்த மின் இணைப்பில் L & T மீட்டர் / 110 volt secondary 5 ams, serial No. 00902875 என்ற மீட்டர் பொருத்தப்பட்டிருந்தது. அந்த மின் இணைப்பில் மீட்டர் பொருத்துவதற்கு ஒரு compartment ம் test block ஐ பொருத்துவதற்கு ஒரு compartment என இரண்டு compartment கள் அடங்கிய மீட்டரிங் Arrangements ஆகும். மீட்டர் பொருத்தப்பட்டுள்ள compartment ல் பகிர்மானப் பிரிவினரால் மாதாந்திர மின் அளவீட்டு கணக்கீட்டிற்காக ஏற்கனவே பொருத்தப்பட்டிருக்கும் முத்திரைகளை அகற்றிவிட்டு, மீட்டரின்பெட்டியின் மேற்புறம் B69474 , கீழ்புறம் B6945 என்ற பாதுகாப்பு முத்திரைகள் சரியாக இருந்தது. Test block chamber ல் உள்ள பாதுகாப்பு முத்திரைகளை ஆய்வு செய்தபோது நாங்கள் ஏற்கனவே பொருத்தியிருந்த top -ல் A470407 bottom- ல் A470408 என்ற பாதுகாப்பு முத்திரைகளை ஆய்வு செய்தபோது அவைகள் அகற்றப்பட்டு

மின் நுகர்வோராலேயே அதே மாதிரியில் போலியாக அதே சீரியல் நம்பரில் சீலிங் led பாதுகாப்பு முத்திரைகள் தயார் செய்து பொருத்தப்பட்டிருந்தது. அதனை மேலும் ஆய்வு செய்தபோது எங்கள் Original சீலிங் led ன்படி இல்லாமல் எழுத்துக்கள் அளவிலும் வடிவத்திலும், பரிமானத்திலும் வேறுபட்டிருந்தது. மின் நுகர்வோர் தமக்கு வேண்டும்போதெல்லாம் MRT பிரிவினரால் வைக்கப்பட்ட பாதுகாப்பு முத்திரைகளை அகற்றிவிட்டு, போலியாக தயார் செய்த முத்திரைகளை உபயோகித்து test block chamber ல் metering secondary current ல் loop செய்து மீட்டரில் recording ஐ பதிவு செய்யாவண்ணம் செய்துள்ளது தெரியவந்தது. மேற்படி நிகழ்வினை ஒருகடிதம் மூலமாக உதவி செயற்பொறியாளர் பகிர்மானம் கல்லுப்பட்டி அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை நான் கொடுத்தது தான் அது அ**.**சா**.**ஆ**. 1** ஆகும். அன்றைய தினமே நானும், உதவி செயற்பொறியாளர் பகிர்மானம் கல்லுப்பட்டி அவர்களும், உதவி செயற்பொறியாளர் அமலாக்கப்பிரிவு விருதுநகர் அவர்களும் ஒரு எழுத்துமூலமான புகாரை தயார் செய்து கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் புகாரளித்தோம். புகாருடன் எனது கடிதம், மின்சார வாரியத்திற்கு

ஏற்பட்ட இழப்பீட்டு கணக்கீட்டுத்தாள், மீட்டர் மற்றும் metering Arrangements உள்ள மீட்டர் பெட்டி ஆகியவையனைத்தும் மேற்படி கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் திரு. செல்வராஜ் கல்லுப்பட்டி பகிர்மானம் அவருடைய கையெழுத்து எனக்குத் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் உதவி செயற்பொறியாளர் திரு. செல்வராஜ் கல்லுப்பட்டி பகிர்மானம் அவரால் கொடுக்கப்பட்டதுதான். அதிலுள்ள கையெழுத்து அவருடையது தான். அந்த புகார் அ**.**சா**.**ஆ**.2 (**எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)** என்னிடம் காட்டப்படும் கணக்கீட்டுத்தாளனது உதவி செயற்பொறியாளர் திரு. செல்வராஜ் கல்லுப்பட்டி பகிர்மானம் அவர்களால் தயாரிக்கப்பட்டது தான். அது அ**.**சா**.**ஆ**.3 (**எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)** ஆகும். இது குறித்து 27.09.2005 அன்று கல்லுப்பட்டி போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை **(** எதிரிகள் தரப்பில்**)**

மின்சார வாரியத்தில் பல்வேறு பிரிவுகள் உண்டென்றால் சரிதான். பகிர்மானம், அமலாக்கம், vigilance, MRT என பிரிவுகள்

உள்ளதென்றால்சரிதான். அந்த பிரிவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியான பணிகளைக் கொண்டதென்றால்சரிதான். பகிர்மானம் என்பது வாடிக்கையாளர்களுக்கு மின் பகிர்ந்தளிப்பது, அமலாக்கம் என்பது திடீர் ஆய்வு செய்யக்கூடிய அமைப்பு, MRT என்பது தொழில்நுட்பம் சார்ந்த தவறுகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு அமைப்பு, Vigilance என்பது மனுவில் பேரில் மின்சார விநியோகத்தில் ஏற்படும் அனைத்து விதமான தவறுகளைக் கண்டுபிடிப்பது என்றால் சரிதான். இவ்வழக்கில் பட்டியல் சாட்சி1 திரு. செல்வராஜ் என்பவர் எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் சரிதான்.அந்த வேண்டுகோள் கடிதமானது தற்சமயம் எங்கள் அலுவலககோப்பிலோ அல்லது நீதிமன்றத்திலோ இல்லை என்றால் சரிதான். அவர் தொலைபேசிமூலம் என்னிடம் சொன்னார். அவர் என்னிடம் மின்சார திருட்டு நடைபெற்றுள்ளது தான் பார்த்தபோது சீல் போலியாக உள்ளது என்று அழைத்தன் பேரில்தான் நான் சென்றேன் என்றால் அந்த சீல் போலியானதா என உறுதி செய்யத்தான் என்னை கூப்பிட்டார். திரு. செல்வராஜ் ஆய்விற்கு முன் எந்த தேதியில் அந்த நிறுவனத்தை பார்வையிட்டார் என்று என்னால் உறுதியாகச் சொல்லமுடியாது. அவர்

முந்தைய பயன்பாட்டின் அடிப்படையிலும், மேற்படி நிறுவனத்தை பார்வையிட்டதன் அடிப்படையிலும், சந்தேகத்தின் அடிப்படையிலும் என்னை அழைத்தார். 25.09.2005 அன்று நான், திரு. செல்வராஜ், திரு. இரவீந்திரன் ஆகிய எங்களைத் தவிர வேறு யாரும் ஆய்விற்கு வந்தனரா என்றால் அந்தஆய்வினை நாங்கள் மூவர்மட்டும்தான் செய்தேன். எங்களுடன் தொழில்நுட்பத்தில் தனித்துவம் கொண்ட பொறியாளர் உட்பட 10 பேர் உடனிருந்தார்கள். நாங்கள் ஆய்வு செய்ய சுமார் 2 மணிநேரம் வரை எடுத்துக் கொண்டோம். அன்றைய தினமே நாங்கள் மின்சாரபயன்பாட்டிற்குரிய மின்மீட்டரை கைப்பற்றினோமா என்றால் இல்லை. நாங்கள் ஆய்விற்கு செல்கையில் எங்களுடன் புகைப்பட நிபுணரை அழைத்துச் சென்றோமா என்றால் அழைத்துச் சென்றோம். புகைப்படங்கள் எடுக்கப்பட்டன என்றால் சரிதான். பின்பு, சம்பவ இடத்தில் பார்வை மகசர் தயார் செய்தோமா என்றால் செய்தோம். அதுபோல் சம்பவ இடத்தில் நிர்வாகத் தரப்பு சாட்சியை அழைத்தோமா என்றால் அழைத்தோம். அவருக்கு நாங்கள் ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தோமா என்றால்கொடுத்தோம். நாங்கள் ஆய்வினை முடித்தபின்பு ஆய்வறிக்கையையும், பார்வை மகசரின் நகலையும்

நிர்வாகத் தரப்பு சாட்சியிடம் கொடுத்து கையெழுத்து பெற்றோம் என்றால் சரிதான். அப்போது வருவாய்த்துறையைச் சேர்ந்த யாரையும் அழைத்தோமா என்றால் வி. ஏ. ஓ – வை அழைத்தோம் அவர் வந்திருந்தார். அன்றைய தினமே எங்கள் ஆய்வுக் குழுவினர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்தோமா என்றால் ஆய்வு முடித்தபின்பு தகவல் தெரிவித்தோம். நாங்கள் ஆய்வினை முடித்து திரும்பும்வரை காவல்நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் வந்தார். அவரிடம் வாய்மொழியாக குற்றச் செய்கையை குறித்து புகாரினை சாட்சி திரு. செல்வராஜ்தான் சொன்னார். அ.சா.ஆ.1 ஆவணமானது என்னால் சொல்லச் சொல்ல என் கீழ்நிலை அதிகாரிமூலம் தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 2001 – 2006 காலகட்டங்களில் மின்சார தட்டுப்பாடு கடுமையாக தமிழ்நாட்டில் நிலவியது என்றால் இல்லை. 2001 – 2006 காலகட்டங்களில் மின்சார தட்டுப்பாடு கடுமையாக தமிழ்நாட்டில் நிலவியது என்றும் இவ்வழக்கிற்காக நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஆய்வு செய்த டி. கல்லுப்பட்டி குன்னத்தூர் பகுதியானது தொழிற்சாலை பகுதி அல்ல விவசாயம்

சார்ந்த பகுதி என்றால் சரியல்ல. அப்பகுதி எங்களின் விதிகளின் படி விவசாய பகுதி என்றால் சரியல்ல. விவசாய பகுதியில் 1phase current and 3 phase current என காலவிகிதாசாரப்படி மின் விநியோகம் வழங்கப்படும் என்றால் சரிதான் மேலும், தொழிற் சாலை அமையும் பட்சத்தில் அதற்கு மின் இணைப்பு வழங்கும் பட்சத்தில் தொடர்ந்து 3 phase current வழங்க மின்சார வாரியம் தயாராக உள்ளது. அதற்கென சில விதிமுறைகளும், கூடுதலாக பணம் கட்டி கூடுதலாக Transformer போடப்படவேண்டும் என்றால் சரிதான். மேலும் மின்சாரம் வழங்கப்படும் துணை மின் நிலையத்தில் போதிய மின் மாற்றி திறன் இருக்கும்பட்சத்திலும், தொழிற் சாலை அமையும் இடத்தில்தொடர்ந்து 3 phase line செல்லும்பட்சத்தில், கூடுதலாக பணம் கட்டத்தேவையில்லை. புதிதாக power transformer போடவேண்டிய தேவையில்லை. இவ்வழக்கில் 3 phase வழங்கப்படுவதற்கு விண்ணப்பமோ, தனிப்பட்ட உத்தரவு குறித்தோ எந்த ஒரு ஆவணமும் இல்லையென்றால் சரிதான். டி. கல்லுப்பட்டி பகுதியில் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை மாதாந்திர மின்சார பராமரிப்பிற்காக மின்தடை செய்யப்படும் என்றால் மாதத்தில் ஒருநாள் செய்யப்படும். ஒரு நிறுவனத்தில் இயந்திர பழுது மற்றும்

தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் தொழிற்சாலை சட்ட வழிகாட்டுதல் நிறுவனம் இயங்கும் காலநிர்ணய அளவு மாறுபடும் என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ. 3 ஆனது திரு. செல்வராஜ் அவர்களால் தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். அதில் மேற்படி நிறுவனத்தின் முந்தைய பயன்பாடு குறித்த எந்தஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆய்வின்போது மின்சார பயன்பாடு குறித்த அட்டையோ அல்லது இரசீதுகளோ கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 3 ஆனது தோராயமாக ஒரு அனுமானத்தின்பேரில் நிறுவனம் 24 மணி நேரம் இயங்கியதாக ஒரு கற்பனையின்பேரில் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணம் ஒரு முழுமைபெற்ற அறிக்கையல்ல என்றால் சரியல்ல. அந்நிறுவனத்தின் வேலை பார்த்த நபர்கள் குறித்தோ அங்கு எத்தனை shift பணிகள் நடைபெற்றது என்பது குறித்தோ ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லையென்றால் சரிதான். அ.சா.ஆ. 1 ஆனது " மீட்டர் பாக்ஸின் மேற்புறம் வைக்கப்பட்டிருந்த சீல் எண்.B69474 அடைப்புக்குள்ள பகிர்மானம் மற்றும் கீழ்புறம் சீல் எண். B69475 பகிர்மானம் இருக்கின்றது " என

அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதென்றால் சரிதான். மேற்படி முத்திரையானது எந்த மின் இணைப்பு கொண்ட மீட்டர்பெட்டிக்கு கொடுக்கப்பட்டது என்ற குறிப்புகள் எங்கள் அலுவலக ஆவணத்தில் இருக்குமென்றால் சரிதான். ஒவ்வொரு இணைப்பிற்கும் வெவ்வேறான பாதுகாப்பு முத்திரையும், எண்ணும் வழங்கப்படும் என்றால் சரிதான். ஒரு மீட்டர் பெட்டிக்கு ஒரு பாதுகாப்பு முத்திரையும், எண்ணும் வழங்கப்படும் என்றால் ஒரு மீட்டர் பெட்டியில் இரண்டு முத்திரைகள் மேலும், கீழும் இருக்கும் அதற்கு தனிப்பட்ட எண்கள் வழங்கப்படும். மீட்டர் பெட்டியின் கீழே test block chamber ல் மேலும் கீழுமாக இரண்டு பாதுகாப்பு முத்திரைகளும், வெவ்வேறு எண்களுடன் MRT பிரிவினரால் வைக்கப்படும். ஆய்வறிக்கையில் சொல்லப்பட்ட இலக்க எண்களானது மாறுபட்டால் அது வேறு நிறுவனத்திற்கு வேறு மின் இணைப்பிற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு முத்திரையாகும். நாங்கள் ஆய்வு செய்த நிறுவனத்தில் ஒரே ஒரு உயர் அழுத்த மின் இணைப்பு மட்டும்தான் இருந்தது என்றால் சரிதான். எங்களால் தயார் செய்யப்பட்ட ஆய்வறிக்கையானது ஒரு நாள் காலதாமதாக ஆய்விற்கு மறுநாள் 26.09.2005 அன்று தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். 27.09.2005

அன்று புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். மேற்படி புகாரானது பட்டியல் சாட்சி 1 திரு. செல்வராஜ் என்பவரால் தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். அ.சா.ஆ. 2 ஆவணத்தில் " ஆய்வின் ஆரம்ப கட்டத்தில் மீட்டரிங் யார்டு கேட்டில் வைக்கப்பட்டிருந்த பகிர்மான பாதுகாப்பு சீல்கள் எண். B 69487 மேல்புறம் மற்றும் B 69488 கீழ்புறம் ஆகியவை மேற்கூறிய மின் நுகர்வோர் பிரதிநிதி முன்பு ஆய்விற்காக அகற்றப்பட்டுள்ளது என உள்ளது" என்றால் சரிதான். நாங்கள் சம்பவ தினத்தன்று நிறுவனத்தில் எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்பதால்தான் பாதுகாப்பு சீல்களின் எண்கள் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரு மின் இணைப்பிற்கு 2 பாதுகாப்பு சீல்களும், பாதுகாப்பு எண்களும் வழங்கப்படும் என்றால் தவறு. என்னுடைய அறிக்கையில் மீட்டரிங் யார்டு கேட் -ல் உள்ள பாதுகாப்பு முத்திரை பற்றி சொல்லப்படவில்லையென்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள இரண்டு சீல்கள் வைக்கப்பட்டுள்ளது என்றும் அதில் அவைகள் எதில் எதில் வைக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முறையாக ஆவணங்களை பார்வையிடாமல், முறையான ஆய்வு மேற்கொள்ளாமலும், புள்ளி விபரக் கணக்கிற்காக

போடப்பட்ட பொய் வழக்கில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் சொன்னால் சரியல்ல. ஒரு நிறுவனத்தை சோதனை செய்தவற்கு Electrical Inspector எனும் ஒரு பதவி உள்ளதென்றால் அரசாங்கத்தில் உள்ளனர் எங்கள் மின்சார வாரியத்தில் இல்லை. மின்சார விதிகளின் படி உதவி செயற்பொறியாளர் அமலாக்கம் எந்த ஒரு சூழலிலும் எந்த ஒரு மின் இணைப்பையும் ஆய்வு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு உத்தரவு வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்தை சோதனை செய்ய MRT குழுவிற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கை மற்றும் புகாரில் meter chamber ல் உள்ள பாதுகாப்பு முத்திரைகள் சரியாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் சொன்னபடி சொன்ன விதத்தில் எந்தவித ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்றும், அதனடிப்படையில் புகார் உள்ளிட்ட ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னாலும் முறையான சாட்சிகளின் முன்னிலையில் சான்று பொருட்கள் எங்களால் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் புள்ளி விபரக் கணக்கிற்காக அரசாங்கத்தை திருப்திபடுத்துவதற்காக இந்த

புகாரானது பின்னிட்டு தயாரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. நாங்கள் மனதை ஒருமுகப்படுத்தி ஆவணங்களை ஆய்வு செய்யாமல் ஒருதலைப்பட்சமாக கணக்கீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆய்வு காலத்தில் தமிழ்நாட்டில் அதிகளவில் மின்பற்றாக்குறை இருந்ததென்றும் அதை இவ்வழக்கில் பாதகமாக இருக்கும் என்பதால் மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - பிரபாகரன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.